# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:113 ★24.08.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:113 ★24.08.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


## காந்தம் போன்று முதலீடுகளை ஈர்க்க வேண்டும்

### விண்வெளித் துறைக்கு பிரதமர் புகழாரம்

“இந்திய விண்வெளித் துறை காந்தம் போன்று முதலீடுகளை ஈர்க்க வேண்டும்'' என்று பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

கடந்த 2023 ஆகஸ்ட் 23ம் தேதி சந்திரயான்3 விண்கலம், நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. அதன் மூலம் நிலவின் தென் துருவத்தில் கால் பதித்த முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது. அதை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 23ம் தேதி, தேசிய விண்வெளி தினமாக கொண்டாடப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

அதன்படி ஆகஸ்ட் 23ம் தேதி நேற்று தேசிய விண்வெளி தினம் கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு பிரதமர் மோடி தனது சமூகவலைதளப் பக்கத்தில் நேற்றுவெளியிட்ட பதிவில், ''அனைவருக்கும் தேசிய விண்வெளி தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பெரிய கனவுகளைக் காண்போம். மேலும் புதுமைகளைப் புகுத்துவோம். புதிய எல்லைகளைத் தொடுவோம்'' என்று தெரிவித்துள்ளார்.

மேலும் விண்வெளி துறை சார்ந்த 20 ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் (சிஇஓ) பிரதமர் நரேந்திர மோடி கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடினார்.

அந்தக் கலந்துரையாடல் வீடியோ நேற்று வெளியிடப்பட்டது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி கூறியிருப்பதாவது:

விண்வெளித் துறை தனியாருக்குத் திறந்து விடப்பட்டு உள்ளது. இந்தத் துறையில் இளம் தலைமுறையினர் துணிச்சலாகக் களமிறங்கி உள்ளனர்.

இந்திய அரசுமீது நீங்கள் நம்பிக்கை வைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இதேபோல அரசும் உங்கள் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறது. நாம் ஒன்றிணைந்து புதிய சாதனைகளைப் படைப்போம்.

இந்திய விண்வெளித் துறை, காந்தம் போன்று முதலீடுகள் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்க வேண்டும். விண்வெளித் துறை சார்ந்த நிபுணர்களையும் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் கவர்ந்திழுக்க வேண்டும். இத்துறையில் ஆர்வம் உள்ள இந்திய வம்சாவளி இளைஞர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வரலாம்.

இங்குள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் இணைந்து தங்கள் திறமையை உலகுக்கு நிரூபிக்கலாம்.

விண்வெளித் துறை சார்ந்த நிறுவனங்களுக்கும் பிற துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் இடையே ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும். விண்வெளி குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் இணைந்து செயல்படலாம்.

வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் வேளாண் துறைகளுடன் இணைந்து விண்வெளி ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் செயல்படலாம். விவசாயிகளுக்குத் தேவையான தகவல்களை வழங்கி, விளைச்சலை அதிகரிக்க செய்யலாம். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.



ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவன சிஇஓ பவன் குமார் சந்தனா பேசும்போது, "கடந்த ஜூலை 18ம் தேதி இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. அடுத்த ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் ஒரு ராக்கெட்டை விண்ணில் செலுத்த ஸ்கைரூட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அடுத்த கட்டமாக ஒரு வாரத்துக்கு ஒரு ராக்கெட்டை விண்ணில் செலுத்துவோம்'' என்றார்.

விண்ணில் மருந்து தயாரிப்பு: செரன்டிபிட்டி ஸ்பேஸ் என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம் சார்பில் விண்வெளியில் மருந்துகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது. இதுகுறித்து அந்த நிறுவனத்தின் சிஇஓ அந்தரிஷ் பரிச்சா கூறும்போது, “மருந்துகளைத் தயாரிக்கும் போது புவிஈர்ப்பு விசை காரணமாக ரசாயனங்கள், புரதங்கள் ஒன்றிணைவதில் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. விண்வெளியில் ஈர்ப்பு விசை கிடையாது. அங்கு ரசாயனங்கள், புரதங்கள் மிகவும் நேர்த்தியாக ஒன்று சேரும். இதை அடிப்படையாக வைத்து விண்வெளியில் மருந்துகளைத்தயாரித்துபூமிக்குக் கொண்டு வருவோம்'' என்றார்.

பல்வேறு ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் சிஇஓக்கள், விண்வெளித் துறை சார்ந்த தங்களது லட்சியங்களைப்பிரதமர்நரேந்திர மோடியுடன் பகிர்ந்து கொண்டனர்.

கேம்பிரிட்ஜ்பல்கலை. ஆய்வு தகவலுக்கு இஸ்ரோ மறுப்பு

உலக நாடுகளைவிட குறைந்த செலவில் செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவும் நாடு இந்தியா என்ற கருத்து உள்ளது. இந்நிலையில், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் மற்றும் போலிடெக்னிகோடிடோரினோ அமைப்பின் பொருளியல் வல்லுநர்கள்வெளியிட்ட ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது: ஒரு கிலோ எடையுள்ள செயற்கைக்கோளை, தாழ் புவி வட்டப்பாதைக்கு அனுப்ப இந்தியாவுக்கு 13,302 அமெரிக்க டாலர் செலவாகிறது.

இது உலகின் முக்கிய விண்வெளி அமைப்புகளின் செலவுடன் ஒப்பிடுகையில் மிக அதிகம். அமெரிக்காவில் இதற்கான செலவு 3,225 டாலர்.

ஜப்பானில் 5,287, சீனாவில் 5,809, ரஷ்யாவில் 6,682, ஐரோப்பாவில் 9,897 டாலராகஉள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் டாக்டர் வி. நாராயணன்கூறுகையில், ''தவறான தரவுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு முடிவுகள் உள்ளதால் அது நிராகரிப்பட வேண்டியது'' என்றார். இஸ்ரோ முன்னாள் தலைவர் எஸ்.சோமநாத் கூறுகையில், ''ஒருகிலோ செலவை மட்டும் அடிப்படையாக வைத்து விண்வெளி ஏவுதலின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தை முழுமையாக மதிப்பிட முடியாது'' என்றார்.

## மேட்டூருக்கு நீர்வரத்து விநாடிக்கு 13,538 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 13, 538 கனஅடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஏற்ற இறக்கத்தில் உள்ளது. அணைக்கு நேற்று முன் தினம் விநாடிக்கு 11,308 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மாலை 12,324 கனஅடியாகவும், நேற்று காலை 12,883 கனஅடியாகவும் நீர் வரத்து உயர்ந்தது. தொடர்ந்து மாலையில் மேலும் அதிகரித்து விநாடிக்கு 13,538 கனஅடி யானது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.



வரும் நீரின் அளவைவிட வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைவாக இருப்பதால், நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.தற்போதைய நிலவரப்படி நீர்மட்டம் 86.83 அடியாகவும், நீர் இருப்பு 49.09 டி.எம்.சி.யாகவும் உள்ளது.

இதனிடையே, தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் விநாடிக்கு 12,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 13,000 கனஅடியானது.

## காஸ் சிலிண்டர் வாடிக்கையாளர்களின் மின்னணு சரிபார்ப்புக்கான அவகாசம் ஆக.31 வரை நீட்டிப்பு

தமிழகம் முழுவதும் சமையல் எரி வாயு சிலிண்டர் வாடிக்கையாளர்களின் ‘இகேஒய்சி’ மின்னணு சரிபார்ப்புக் கான அவகாசம் ஆக.31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதை செய்யாவிட்டால், மானியத் தொகை ரத்து செய்யப்படும். புதிய சிலிண்டர் முன் பதிவு ஏற்கப்படாது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு 14.20 கிலோ எடையில் சமையல் எரி வாயு சிலிண்டர்களை விநியோகம் செய்கின்றன.

முறைகேடான எரிவாயு இணைப்புகளைக் கண்டறியவும், மானியம் தவறாகப் பயன் படுத்தப்படுவதை தடுக்கும் வகையிலும் ‘இகேஒய்சி’ (e KYC) எனும் மின்னணு சரிபார்ப்பை மேற்கொள்ள, வாடிக்கையாளர்களுக்கு பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் அறிவுறுத்தி உள்ளன.

சிலிண்டர் இணைப்பு யார் பெயரில் உள்ளதோ அவர் சம்பந்தப்பட்ட சிலிண்டர்விநியோகஏஜென்சி அலுவலகத்துக்கு நேரில் சென்று, எண்ணெய்நிறுவனங்களின் மொபைல் செயலியில், விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.

இதன்மூலம் வாடிக்கையாளரின் உண்மைத் தன்மை சரிபார்க்கப்பட்டு, உறுதி செய்யப்படும். ஏற்கெனவே, மின்னணு சரி பார்ப்புக்கான கடைசி தேதி ஆக.16ம் தேதி என்று அறிவிக்கப்பட்டது. வாடிக்கையாளர்கள் வசதிக்காக, ஆக.23ம் தேதி (நேற்று) வரைநீட்டிப்பு செய்யப்பட்டது.

கடந்த வாரம் வரை தமிழகம் முழுவதும் 93 சதவீதம் பேர் சரிபார்ப்பை நிறைவு செய்துள்ளனர். இந்நிலையில், மீதமுள்ள வாடிக்கையாளர்களும் சரி பார்ப்பை நிறைவு செய்ய வசதியாக, மின்னணு சரிபார்ப்புக்கான அவகாசம் ஆக. 31ம் தேதி நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து எண்ணெய் நிறுவன அதிகாரிகள் கூறியபோது, “அனைத்து வாடிக்கையாளர்களும் சரி பார்ப்பை நிறைவு செய்ய வேண்டும் என்ற நோக்கில் இதற்கான அவகாசம் தற்போது ஆக. 31ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இகேஒய்சி நடைமுறையை நிறைவு செய்யாவிட்டால், மானியத் தொகை ரத்து செய்யப்படும். புதிய சிலிண்டர் முன் பதிவு செய்யும் போது, கணக்கு முடக்கப் பட்டதாகக் காண்பித்து, முன்பதிவு நிராகரிக்கப்படவும் வாய்ப்பு உள்ளது” என்றனர்.

## 70 வயதை கடந்தவர்களுக்கும் திமுகவில் பதவி வழங்கப்படும்: ஆர்.எஸ்.பாரதி தகவல்

“திமுகவில் 70 வயதை கடந்த மூத்த நிர்வாகிகளுக்கு வயது மற்றும் அனுபவத்துக்கு ஏற்ப தகுந்த பொறுப்புகள் மற்றும் பதவிகள் வழங்கப்படும். யாரையும் கட்சி ஒதுக்கவிடாது” என்று அக்கட்சியின்அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திமுக உட்கட்சித் தேர்தல் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கான தேதிகளை கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது வசதிக்கேற்ப விரைவில் முறைப்படி அறிவிப்பார்.

முழு ஒப்புதலுடன் தீர்மானம் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்த மூத்த முன்னோடிகள் மற்றும் பலமுறை ஒன்றிய செயலாளர்களாகப் பணியாற்றிய நிர்வாகிகள் அனைவரிடமும் கலந்தாலோசிக்கப்பட்டது.

அவர்களின் முழு மனப்பூர்வமான ஒப்புதல், வரவேற்புடன் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கட்சியினர் அனைவரும் அடிமட்ட அளவில் இருந்து தேர்தல் பணிகளை மேற்கொள்வதோடு, தங்களைச் சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும் கட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

அனுபவத்துக்கு ஏற்ப பதவி எல்லோரையும் ஒருங்கிணைத்துச்செல்லும்தலைவராக மு.க.ஸ்டாலின்திகழ்கிறார். கட்சி அமைப்பில் 70 வயதைக் கடந்த மூத்த நிர்வாகிகள் யாரையும் கட்சி ஒதுக்கிவிடாது.

அவர்களது வயது, அனுபவத்துக்கு ஏற்ப தகுந்த பொறுப்புகள் மற்றும் பதவிகள் வழங்கப்படும். இளைஞர்களுக்குக் கட்சியில் அதிக அளவில் வாய்ப்பு அளிப்பதோடு, வரவிருக்கும் இடைத்தேர்தல்கள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்கள் உள்ளிட்ட அனைத்து ஆக்கப்

பூர்வமான பணிகளையும் விரைவுபடுத்தி எதிர்கொள்வதற்காகவே இந்த விதிமுறை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்

## மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் தமிழக எஸ்சி, எஸ்டி மாணவர்கள் சேர்க்கை அதிகரிப்பு

பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 36 உண்டு உறைவிட அரசுப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இங்கு பயிலும் மாணவர்கள்

நாடு முழுவதும் உள்ள ஐஐடி, எம்ஐடி, ஐஐஐடி போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் வகையில் நீட், ஜேஇஇ, கிளாட், ஐஎம்யு போன்ற போட்டி தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கான பயிற்சிகளை பழங்குடியினர் நலத் துறை வழங்கி வருகிறது.



அதன்படி, இந்த ஆண்டு 357 மாணவர்கள் பல்வேறு மாநிலங்களில் படிக்கச் சென்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது குறித்து ‘குமிழி’ அரசு பயிற்சி மையத்தின் தலைமை ஆசிரியர் சுமதி கூறியதாவது: பல தடைகளையும் தாண்டி வெளிவருவது மாணவர்களுக்கு சவாலான ஒன்று.

அதை தாண்டி படிக்க அவர்களுக்கு ஊக்கமளித்து வழிநடத்திச் செல்கிறோம். அதன் படி, வாசுகி பவுண்டேஷனுடன் இணைந்து மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறோம்.

42 போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி அளித்து, எங்களது மாணவர்கள் ஐஐடி, எம்ஐடி, நிஃப்ட், என்ஐடி ஆகிய உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர்.

இந்த ஆண்டு ஆதிதிராவிடர் மாணவர்கள் 80 பேர், பழங்குடியின மாணவர்கள் 277 பேர் போட்டித் தேர்வில் வென்று படிக்கச் சென்றுள்ளனர்.

முதல் முறையாக ராஜீவ் காந்தி நேஷனல் ஏவியேஷன் பல்கலைக்கழகத்தில் பழங்குடியின மாணவர் ஒருவர் படிக்கத் தேர்வாகி உள்ளார். தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் இருளர் சமூகத்தை சேர்ந்த மாணவர் சேர்க்கை பெற்றுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

கேரள ஐஐஐடியில் சேர்ந்துள்ள மாணவர் கமலேஷ் கூறியதாவது: எனது சொந்த ஊர் சேலம் மாவட்டம் கெங்கவல்லி கிராமம். பெற்றோர் இருவரும் விவசாய கூலித் தொழிலாளர்கள்.

நான்பள்ளியில்படிக்கும்போதே, உயர் கல்வி நிறுவனத்தில் சேர வேண்டும் என்று பழங்குடியின நலத்துறை ஆணையர் அண்ணாதுரை ஊக்கப்படுத்தினார்.

அதே போல, சமூகநீதி துறை செயலர் சுப்பையன் வழிகாட்டுதல்படி, ‘குமிழி’ பயிற்சி மையம் மூலம் பயின்று ஜேஇஇ தேர்வில் 78 சதவீதம் பெற்று கேரள மாநிலம் கோட்டயத்தில் உள்ள ஐஐஐடி நிறுவனத்தில் பி.டெக் படித்து வருகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து சமூகநீதி துறை அமைச்சர் வன்னியரசு கூறியபோது, “முதல்முறையாக ஏவியேஷன் துறையில் எங்கள் மாணவர்கள் தடம் பதித்ததில் மகிழ்ச்சி.

இடஒதுக்கீட்டை தாண்டி மாணவர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளது. முதல்வரின் ஆணைப்படி, இடைநிற்றல் மாணவர்கள் மீதும் கவனம் செலுத்தி நல்வழிப்படுத்தும் பணிகளில் அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது” என்றார்.

## திருவண்ணாமலையில்

# தங்கும் விடுதிகளில் போலீசார் திடீர் ஆய்வு

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாநகரில் உள்ள பல்வேறு தங்கும்விடுதிகளில்,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர். உதயகுமார் உத்தரவின் பேரில் போலீசார் திடீர் ஆய்வு மேற்





கொண்டு வருகின்றனர்.

திருவண்ணாமலை நகர காவல் துணை கண்காணிப்பாளர் D. துரைகுமார் தலைமையில் 10க்கும் மேற்பட்ட போலீசார் பல்வேறு தங்கும் விடுதிகளுக்குச் சென்று, அங்கு சட்டவிரோத செயல்கள் அல்லது குற்றச் சம்பவங்கள் நடைபெறுகிறதா என்பது குறித்து தீவிர சோதனை மேற்கொண்டனர்.

மேலும், விடுதிகளில் தங்கியுள்ளவர்களின் விவரங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா, அவர்களிடம் உரிய அடையாள ஆவணங்கள் பெறப்பட்டுள்ளதா, சந்தேகத்திற்கிடமான நபர்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பது குறித்தும் போலீசார் ஆய்வு செய்தனர்.

விடுதி நிர்வாகத்தினர், தங்கும் நபர்களின் முழுமையான விவரங்களை முறையாகப் பதிவு செய்து பராமரிக்க வேண்டும் என்றும், சந்தேகத்திற்கிடமான நபர்கள் அல்லது நடவடிக்கைகள் குறித்து உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டனர். திருவண்ணாமலை மாநகரில் குற்றச் செயல்களைத் தடுக்கும் வகையிலும், பொதுமக்கள் மற்றும் வெளியூர்களில் இருந்து வரும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் தங்கும் விடுதிகளில் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுமா?

மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆத்தூர் ஊராட்சியில் முந்தைய திமுக ஆட்சியில் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சற்குணன்




முயற்சியால் ஊரக வளர்ச்சி (ஊராட்சித் துறை) சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (2025 2026 ) கீழ் ஆத்தூர் ஊராட்சி மன்றத் அலுவலகக் கட்டிடம் ரூபாய் 29,93,000 மதிப்பீட்டில் கட்டி முடிக்க ப்பட்டு திறக்கப்படாமல் உள்ளது.

இதனால் ஆத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பல்வேறு பணிகள் பாதிக்கப்படுவதோடு, பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு வருகின்றது என்று குற்றச்சாட்டப்படுகின்றது.

மாதவரம் சட்டமன்ற உறுப்பினர், சோழவரம் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக உடனடியாக கொண்டு வர வேண்டுமென்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாநில அளவிலான துப்பாக்கி சுடுதல் போட்டியில் ஆவடி காவல் ஆணையரக பெண் காவலர்களுக்கு வெள்ளிப்பதக்கம்




தமிழ்நாடு காவல்துறையின் 2026ம் ஆண்டிற்கான மாநில அளவிலான ஆடவர் மற்றும் மகளிர் துப்பாக்கி சுடுதல் போட்டிகள், 19.08.2026 முதல் 21.08.2026 வரை ஒத்திவாக்கம் துப்பாக்கி சுடுதல் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில், ஆவடி காவல் ஆணையரகத்தைச் சேர்ந்த ஆவடி போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த பெண் காவலர் 15685 S.நந்தினி அவர்கள் *Carbine 50 Yards Snap Shooting* பிரிவிலும், ஆயுதப் படை பெண் காவலர் 16826 B.கீர்த்தனா அவர்கள் *Rifle 300 Yards Snap Shooting* பிரிவிலும், வெள்ளிப் பதக்கங்களை வென்றனர். பதக்கங்கள் வழங்கும் நிகழ்ச்சியில், தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள் வெற்றி பெற்ற இரு பெண் காவலர்களுக்கும் பதக்கங்களை வழங்கி சிறப்பித்தார். இதனைத் தொடர்ந்து வெள்ளி பதக்கங்கள் வென்ற S.நந்தினி மற்றும் B.கீர்த்தனா ஆகிய இருவரையும் ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் நேரில் அழைத்து பாராட்டி, வாழ்த்துகளைத் தெரிவித்தார்.




# பி.கே. சிங்கால் நகர் பிளாட் அண்ட் பிளாட் ஓனர்ஸ் அசோசியேஷனுக்கு நன்றி தெரிவித்த பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள்

மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஊராட்சி பவானிநகர், பெரியார்நகர், மகாமேருநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்லக் கூடிய சர்வீஸ் சாலையில் அண்மையில் மின்வாரியத்தால் 10 அடி பள்ளம் தோண்டப்பட்டு அதனை சரியாக மூடாமல் விட்டு விட்டனர். இதனால் இரு, மூன்று சக்கர வாகனங்களில் செல்வோர் விபத்துக்குள்ளாகும் ஆபத்து இருந்தது.

பாடியநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட பி.கே. சிங்கால் நகர் பிளாட் அண்ட் பிளாட் ஓனர்ஸ் அசோசியேஷன் சார்பில் பொதுமக்கள் படும் அவஸ்தைகளை அறிந்து உடனடியாக சிமெண்ட், சல்லிக்கற்கள் கொண்டு அப்பள்ளங்களை மூடி பொதுமக்கள் எளிதாக இரு, மூன்று சக்கர வாகனங்களில் பயணிக்க வசதி செய்து கொடுத்தமைக்காக பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி இந்திரா நகர் அருகே உள்ள பால் கடையில் மதுபான பாட்டில்கள் சட்ட விரோதமாக விற்பனை செய்த கோதமங்கலத்தை சேர்ந்த சக்திவேல் மகன் சோம்நாத் 33 வயது என்பவரே பழனி நகர போலீசார் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்



ஆவணி மாத வளர்பிறை முகூர்த்தத்தையொட்டி, பழநி முருகன் கோயிலில் நேற்று 80 திருமணம் நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்டம் பழநி திருஆவினன்குடி முருகன் கோயிலில் திருமணம் நடந்தால் குடும்பம் சிறப்பாக இருக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. அதனால் இங்கு விசேஷ நாட்கள், சுபமுகூர்த்த தினங்களில் ஏராளமான திருமணங்கள் நடைபெறுகின்றன. இந்நிலையில் நேற்று ஆவணி மாத வளர்பிறை முகூர்த்தம் என்பதால் அதிகாலை 6 மணி முதல் திருமணங்கள் நடந்தன. திருஆவினன்குடி கோயில் வளாகத்தில் மட்டும் நேற்று 80 திருமணங்கள் நடந்தன. திருமணம் முடிந்து மணமக்கள், பெற்றோர், உறவினர்களுடன் சுவாமி தரிசனம் செய்ய திருஆவினன்குடி கோயில் மற்றும் தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் குவிந்தனர். நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். திருஆவினன்குடி கோயில் பகுதி, அடிவாரம் பூங்கா சாலை, குளத்து சாலை, அய்யம்புள்ளி சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் உள்ளூர் மக்கள், பக்தர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர்.

# செங்குன்றத்தில் இரத்ததான முகாம்

தமிழ்நாடு அறிவியல் இயக்கம், ஆரோக்கிய உப குழு, ஸ்ரீ சஞ்ஜனா மருத்துவமனை, இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் பெரம்பூர் கிளை இணைந்து இரத்த தான முகாம் செங்குன்றம் ஸ்ரீ சஞ்ஜனா மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

ஆரோக்கிய உபகுழுவின் மாநில ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அனுரத்னா தலைமை வகித்தார்.

ஸ்ரீ சஞ்ஜனா மருத்துவமனை இயக்குநர் ஸ்ரீனிவாசன் அனைவரையும் வரவேற்றார். இந்தியன் மெடிக்கல் அசோசியேஷன் பெரம்பூர் கிளை செயலாளர் மருத்துவர்ராஜேஷ்குமார், முன்னாள் தலைவர் மருத்துவர் ஹரிபிரசாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட செயலாளர் எஸ்.குமார், மாவட்ட தலைவர் ப. ஜெயநாராயணா, மாவட்டத்துணைத்தலைவர்கள் மதிவாணன், தனஞ்செயன், மோசஸ்பிரபு, தேவேந்திரன், தேவராஜ், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஷியாமளா, மோகன், அழகர், எப்சிபா, நக்கீரன் ஆகியோர் பங்கேற்றனர்.

சுமார் 50 இரத்த தானம் செய்தனர். அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. திருவள்ளூர் அரசு மருத்துவமனை இரத்த வங்கிக்கு இரத்தம் கொண்டு வழங்கப்பட்டது.




# மத்திய அரசு வழக்கறிஞர்கள் நியமனத்துக்கு புதிய வழிகாட்டுதல்கள் வெளியீடு

மத்திய அரசு வழக்கறிஞர்கள் நியமனம் தொடர்பான புதிய வழிகாட்டுதல்களை மத்திய சட்டத்துறை வெளியிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், துணை நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள், குறைதீர் மன்றங்களுக்கு மத்திய அரசு சார்பில் வழக்குகளை நடத்த தனி வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவது வழக்கம்.

இவர்களது பதவிக் காலம் 3 ஆண்டுகள் ஆகும். தற்போது நீதிமன்றங்களில் மத்திய அரசு வழக்கறிஞர்களாக இருப்பவர்களின் பதவிக் காலம் இன்னும் ஓராண்டு உள்ளது.

இந்நிலையில், மத்திய அரசு வழக்கறிஞர்கள் நியமனத்துக்கான புதிய வழிகாட்டுதல்களை மத்திய சட்டத்துறை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: மத்திய அரசு வழக்கறிஞர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்திய பார் கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட சட்டப் பல்கலைக்கழகம் அல்லது சட்டக் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். 1961ம் ஆண்டு வழக்கறிஞர்கள் சட்டத்தின் படி மாநில பார் கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும். அகில இந்திய வழக்கறிஞர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்று பயிற்சி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பிப்பவர்களின் சட்டப் பயிற்சி அனுபவத்தை கருத்தில் கொண்டு மத்திய அரசு வழக்கறிஞர்கள் குழுவில் சேர்க்க பரிசீலிக்கப்படுவார்கள்.

அவர்கள் கையாண்ட வழக்குகளின் தன்மை, அதிக முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளை கையாண்டதில் வழக்கறிஞரின் திறன் ஆகியவை கருத்தில் கொள்ளப்படும். வருமான வரி, சுங்கம், ஜிஎஸ்டி, பிஎம்எல்ஏ போன்ற சிறப்பு சட்டங்களில் அனுபவம் உள்ள வழக்கறிஞர்கள், நீதி மன்றங்கள், தீர்ப்பாயங்கள் மற்றும் நீதித்துறை சார்ந்த மன்றங்களில் மத்திய அரசின் சிறப்புக் குழுக்களுக்கு பரிசீலிக்கப்படுவார்கள்.

10 ஆண்டு சட்டப் பணி முன் அனுபவம்



உள்ள வழக்கறிஞர்கள் அவர்களின் சட்டத்திறன் அடிப்படையில் வழக்கறிஞர்கள் குழுவில் சேர்க்க பரிசீலிக்கப்படுவார்கள். இதற்கான செயல்முறையின்போது ஒரு வழக்கறிஞரின் ஒட்டு மொத்த செயல்திறன் பதிவு, நடத்தை, நேர்மை ஆகியவை கருத்தில் கொள்ளப்படும். விண்ணப்பங்களில் உள்ள தகவல்கள், ஆவணங்களின் உண்மைத்தன்மை அதிகாரிகளால் சரிபார்க்கப்படும். விண்ணப்பதாரர் எந்த குற்ற வழக்குகளிலும் தண்டிக்கப்படவில்லை. பார் கவுன்சில் அல்லது தகுதியான அதிகாரிகளால் வழக்கறிஞர் தொழில் செய்ய தடை விதிக்கப்படவில்லை என்பதை தெரிவிக்க வேண்டும். மத்திய அரசின் நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் வழக்கறிஞர் பதவியை பயன்படுத்தியிருந்தால், சம்பந்தப்பட்டவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். வழக்கறிஞர்களின் செயல்திறன் ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யப்படும்.

நீதிமன்ற அவமதிப்பு, தொழில்முறை ஒழுங்கீனம் அல்லது நீதிமன்றத்தால் தண்டனை பெறுதல் ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய அரசால் எந்த நேரத்திலும் வழக்கறிஞர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படலாம்.

மத்திய அரசு வழக்கறிஞர் குழுவில் தேர்வு செய்யப்படுபவர் அமைச்சகம் / துறை/ நிறுவனம் தொடர்பான தகவல்களின் ரகசியத்தன்மையை பாதுகாக்க வேண்டும். இந்த வழிகாட்டுதல்கள் உடனடியாக அமலுக்கு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



கர்நாடக மாநிலம் பெங்களூரில் இருந்து பழனிக்கு வந்த ஆம்னி பஸ்சில் குட்கா கடத்தி வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் பழனி நகர் போலீசார் சொகுசு பேருந்தை சோதனை செய்தனர்.. ஸ்டெப்னி டயருக்கு அடியில் மறைத்து வைத்து ஒருமூட்டைகுட்காகடத்திவந்தஈரோட்டைசேர்ந்தஆம்னிபஸ்டிரைவர்ராமமூர்த்தி மற்றும் குட்கா வாங்கி பழனி பகுதியில் விற்பனை செய்த பழனி மார்க்கண்டேயன் தெருவை சேர்ந்த தந்தை ரகுமானுல்லா மற்றும் மகன் ரியாஸ்தீன் உள்ளிட்ட மூன்று பேரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படுத்தினர். குட்கா கடத்தி வந்த ஆம்னி பஸ் கைப்பற்றப்பட்டது.

# மக்களின் குறைகேட்டு 100 நாட்களில் கம்பம் தொகுதியை மேம்படுத்திய ஜெகநாத் மிஸ்ரா MLA

## சின்னமனூர் பொதுக்கூட்டத்தில் பெருமிதம்

கம்பம் சட்டமன்ற தொகுதி கடந்த காலங்களில் போதிய பணிகள் மேற்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்ட நிலையில், புதிய ஆட்சியில் 100 நாட்களுக்குள் தொகுதி மக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் குறைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன





என்று கம்பம் சட்டமன்ற உறுப்பினர் P.L.A.ஜெகநாத்மிஸ்ராதெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் சின்னமனூரில்நடைபெற்ற100நாள்சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று அவர் உரையாற்றினார். கம்பம் தொகுதியில் இது வரை அரசு கலைக் கல்லூரி இல்லாத நிலை நீடித்து வந்த சூழலில், தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று விரைவில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கான அறிவிப்பு வெளியாக உள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும், பொதுமக்களின் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க கம்பம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் 20க்கும் மேற்பட்ட அலுவலர்கள் பிரத்யேகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் நேரில் மட்டுமின்றி, வாட்ஸ்அப் எண் வாயிலாகவும் தங்களது குறைகளை தெரிவிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. தினமும் ஒவ்வொரு ஊருக்கும் நேரடியாக சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்து, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையையும் விரைவான செயல்பாடுகளையும் உறுதிசெய்து, 100 நாட்களிலேயே லஞ்சம் மற்றும் முறைகேடுகளை கட்டுப்படுத்தி வரலாற்று சாதனையை முதலமைச்சர் படைத்துள்ளார். உள்ளாட்சி தேர்தலிலும் இந்த நற்பணிகள் தொடர நிர்வாகிகள் அனைவரும் அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க அயராது உழைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இக்கூட்டத்திற்கு தேனி தென்மேற்கு மாவட்ட கழக பொருளாளர் கவுதம் தலைமை தாங்க, இணை செயலாளர் கூடல் செல்வேந்திரன், துணை செயலாளர் கதிரேசன் முன்னிலை வகித்தனர். தலைமை கழக பேச்சாளர் அபுதாகீர் வரவேற்புரையாற்றினார். மாநில செய்தி தொடர்பாளர் சௌந்தர் உட்பட ஏராளமான கட்சி நிர்வாகிகளும் தொண்டர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### சின்னமனூரில்

# சுற்றுச்சூழல் காக்கும் மரபுவழி உழைப்பு; களிமண் விநாயகர் சிலைகள் தீவிர தயாரிப்பு

தேனி மாவட்டம் சின்னமனூர் நகரில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவை தொடர்ந்து, அப்பகுதிவாழ் பக்தர்கள் விநாயகர் சிலைகளை முறைப்படி எடுத்து சென்று, இரண்டு நாட்கள் தெருக்களில் பந்தலிட்டு சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்ட பின், மூன்றாம் நாள் ஆற்றில் கரைப்பது வழக்கமாக உள்ளது. இந்த ஆண்டும் விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, சின்னமனூர்





முத்தாலம்மன் கோவில் அருகில் பாரம்பரிய முறையில் களிமண்ணால் ஆன விநாயகர் சிலைகள் செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இங்கு 3 அடி முதல் 8 அடி வரை பல்வேறு உயரங்களில் கலைநயமிக்க சிலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இப்பணியில் ஈடுபட்டுள்ள சிற்பக் கலைஞர்களான கண்ணன், முத்துக்குமார் மற்றும் வெங்கடேசன் ஆகியோர் கூறுகையில், "நாங்கள் ரசாயன பொருட்களை பயன்படுத்தாமல் முற்றிலும் இயற்கை முறையில் வண்டல் மண், குறுமணல், மரத்தூள், நெல் உமி மற்றும் தென்னை நார் ஆகியவற்றை சரியான விகிதத்தில் கலந்து சிலைகளை செய்து வருகிறோம். 3 அடி உயர விநாயகர் சிலை சுமார் 15 கிலோ எடையிலும், 7 அடி உயர சிலை 50 கிலோ எடையிலும் உருவாக்கப்படுகிறது. இந்த சிலைகள் நீர்நிலைகளில் கரைக்கப்படும்போது, ஆற்றில் வாழும் மீன்கள் உள்ளிட்ட நீர்வாழ் உயிரினங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாமல், வெறும் 10 நிமிடங்களில் நீரில் எளிதில் கரைந்துவிடும் சிறப்பு பெற்றவை" என்று தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கூறுகையில், "இன்றைய நவீன உலகில் பல்வேறு மாற்றங்கள் வந்தபோதிலும், எங்களின் பாரம்பரிய மண் கலை மற்றும் கைத்தொழில் அழிந்துவிடக் கூடாது என்பதற்காகவே தொடர்ந்து களிமண் சிலைகளை செய்து வருகிறோம். இருப்பினும், நாங்கள் போடும் கடின உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லை. வரும் காலங்களில் எங்களை போன்ற புதிய சிற்பக் கலைஞர்கள் அதிகமாக உருவாக வேண்டும் என்பதே எங்களின் விருப்பம்" என்றனர். தொடர்ந்து, பாரம்பரிய மண்பாண்ட மற்றும் கைத்தொழில் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசும் மாவட்ட ஆட்சியரும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சிலைசெய்வதற்குதேவையானமண்ணை எளிதாகவும் சிரமமின்றியும் பெற வழிவகை செய்ய வேண்டும் எனவும், மண்பாண்டம் மற்றும் களிமண் சிற்ப கைத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு மானியங்கள், நலத்திட்டங்கள் மற்றும் பயிற்சிகள் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். உழைப்புக்கேற்ற நியாயமான ஊதியம் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இந்த தொழில் அழியாமல் தலைமுறை கடந்து வாழும் என அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

தேனி மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்களும், பிற மாவட்டங்களை சேர்ந்த வழிபாட்டு குழுவினரும், சுற்றுச்சூழலுக்கு பாதகமில்லாத பாரம்பரிய களிமண் விநாயகர் சிலைகள் தேவைப்பட்டால் தங்களை நேரடியாக தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளனர்.

தொடர்பு எண்கள்: 9788942141, 8667534642 (குறைந்த விலையில் நிறைவான தரத்துடன் சிலைகள் செய்து தருகிறோம்)

### தேசபக்தி நாளிதழ் செய்தி எதிரொலி:

# செங்குன்றம் மஸ்ஜிதே ஆயிஷா, சர்ச் அருகே நிறுவப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்கு ஒளிர்ந்தது; பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் நன்றி தெரிவிப்பு



மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவரிக்குப்பம்) பேரூராட்சிக்குட்பட்ட செங்குன்றம் மார்க்கெட்டில் அமைந்துள்ள மஸ்ஜிதே ஆயிஷா அருகில், காவல் நிலையம் எதிரே அமைந்துள்ள சர்ச் அருகில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.கிரிராஜன் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் தலா ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் சிறு மின்கோபுர உயர்மின் கோபுர எல்இடி விளக்கு பல மாதங்களுக்கு முன்பு நிறுவப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படவில்லை என்று ஒரு சில நாள்களுக்கு முன்பு தேசபக்தி நாளிதழில் செய்தி வெளியிட்டிருந்தோம்.

இச்செய்தியை அறிந்த செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி நிர்வாகத்தினர் உடனடியாக புதிதாக நிறுவப்பட்ட உயர் மின்கோபுர விளக்கிற்கு மின்வசதி செய்து பொதுமக்களின் பயன்பாட்டு கொண்டு வரப்பட்டு, உயர்மின் கோபுர விளக்கு நிறுவப்பட்டுள்ள மஸ்ஜிதே ஆயிஷா, சர்ச் ஆகிய இரண்டு இடங்களிலும் இரவில் விளக்குகள் ஒளிர்ந்து வருகின்றது. இந்த உயர்மின் கோபுர விளக்கை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த பேரூராட்சி நிர்வாகத்தினருக்கும் தேசபக்தி நாளிதழுக்கும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் தங்களது நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.



# குப்பை மேடாக மாறிய உண்ணாமலை அம்மன் நகர்

## துர்நாற்றத்தால் பொதுமக்கள் கடும் அவதி

திருவண்ணாமலை:திருவண்ணாமலைநகரைஅடுத்த வேங்கிக்கால் புதூர் பகுதியில் உள்ள உண்ணாமலை அம்மன் நகரில், நீண்ட நாட்களாக அகற்றப்படாமல் குவிந்து கிடக்கும் குப்பைகளால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

குடியிருப்பு பகுதிக்கு அருகே குப்பைகள் தொடர்ந்து கொட்டப்பட்டு வருவதால், அப்பகுதி முழுவதும் குப்பை மேடாக காட்சியளிக்கிறது. பல நாட்களாக குப்பைகள் அகற்றப்படாத நிலையில், தற்போது அவற்றில் இருந்து கடும் துர்நாற்றம் வீசுவதால் பொதுமக்கள் மூக்கைமூடிக்கொண்டுசெல்லும்நிலைஏற்பட்டுள்ளது.

மேலும், குப்பைகள் முறையாக அகற்றப்படாததால் அவற்றில் மழைநீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகும் சூழல் உருவாகியுள்ளது. இதனால், அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் இருப்பதாக பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

குடியிருப்புகள்அருகேகுவிந்துகிடக்கும்குப்பைகளில் பிளாஸ்டிக் கழிவுகள், உணவுக் கழிவுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான கழிவுகள் காணப்படுகின்றன. இதனால் தெருநாய்கள், கால்நடைகள் உள்ளிட்டவை குப்பைகளை கிளறி சாலைகளில் சிதறடிப்பதால், சுற்றுப்புறமும் மேலும் அசுத்தமாகி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குப்பைகளில் இருந்து வீசும் துர்நாற்றம் காரணமாக வீடுகளில் வசிப்பவர்களும், அவ்வழியாகச் செல்லும் பொதுமக்களும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக, குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் வசிக்கும் பகுதிகளில் சுகாதார பாதிப்பு ஏற்படும் நிலை இருப்பதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல முறை தெரிவித்தும், குப்பைகள் முழுமையாக அகற்றப்படாமல் இருப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். எனவே, உண்ணாமலை அம்மன் நகரில் நீண்ட நாட்களாக குவிந்து கிடக்கும் குப்பைகளை உடனடியாக அகற்றி, அப்பகுதியை தூய்மைப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், குப்பைகள் மீண்டும் தேங்காத வகையில் தினசரி முறையான குப்பை சேகரிப்பு மற்றும் தூய்மை பணிகளைமேற்கொள்ளவேண்டும்என்றும், குடியிருப்பு பகுதிகளில் சுகாதாரத்தை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

குப்பை அகற்றப்படுமா?

உண்ணாமலை அம்மன் நகரில் நீண்ட நாட்களாக நிலவி வரும் இந்த சுகாதார பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தீர்வு காண வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. குப்பைகளை அகற்றுவதுடன், தொடர்ந்து கண்காணித்து தூய்மையான சுற்றுச்சூழலை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# செங்குன்றம் மேத்யூ கார் மெண்ட்ஸ் கிளை திறப்பு விழா






சென்னை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள மேத்யூ கார்மெண்ட்ஸின் 18வது கிளை செங்குன்றம் பேருந்து நிலையம் எதிரே துவக்கப்பட்டது. செங்குன்றம் கிளையின் உரிமையாளர் நிர்வாக இயக்குநர் சரவணன் தலைமை தாங்கினார். முதன்மை நிர்வாக அதிகாரி சுபாஷ் அனைவரையும் வரவேற்றார்.

பொது மேலாளர் ஜாவீத், கிளை மேலாளர் விஜய், செல்வா உள்ளிட்ட பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

செங்குன்றம் மேத்யூ கார்மெண்ட்ஸ் திறப்பு விழாவை முன்னிட்டு இக்கிளையின் இன்ஸ்டாகிராமை பின்தொடர்ந்தவர்களுக்கு ரூ. 49க்கு டிசர்ட் வழங்கப்பட்டது. இதனால் வாடிக்கையாளர்கள் கூட்டம் அலைமோதியது. முதல் 100 வாடிக்கையாளருக்கு லேப்டாப் பேக்கும், பொருள்கள் வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அதிர்ஷ்டக் கூப்பனும் வழங்கப்படுகிறது. பம்பர் குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தங்க நாணயம், வெள்ளி நாணயம், பிரிட்ஜ், மிக்ஸி, எல்இடி டிவி, வாஷிங் மெஷின் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் வழங்கப்பட உள்ளது என்றார் நிர்வாக இயக்குநர் சரவணன்.

### பழநி அருகேயுள்ள

# பாலசமுத்திரம் அகோபில வரதராஜப் பெருமாள் கோயில் ஆவணி பிரம்மோற்சவ திருவிழா

பழநி அருகேயுள்ள பாலசமுத்திரம் அகோபில வரதராஜப் பெருமாள் கோயில் ஆவணி பிரம்மோற்சவதிருவிழாநேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. பழநி அருகே பாலசமுத்திரத்தில் அகோபில வரதராஜப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உபகோயிலான இக்கோயிலில் ஆவணி பிரம்மோற்சவ திருவிழா நேற்று தொடங்கி செப்.2ம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற உள்ளது. திருவிழாவின் முதல் நாளான நேற்று காலை பெருமாள், அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து,

காலை 8.30 மணிக்கு மேல் கொடியேற்றம் நடந்தது. இந்நிகழ்ச்சியில், கோயில் இணை ஆணையர் (பொ) வெங்கடேஷ், கண்காணிப்பாளர் அழகர்சாமி மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பத்துநாள்திருவிழாவில் தினமும் பக்தி சொற்பொழிவு மற்றும் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலா நடக்க உள்ளது. விழாவின் முக்கிய நிகழ்வாக ஆக.29ம் தேதி மாலை 5.30 மணிக்கு





மேல் திருக்கல்யாணம், ஆக.30ம் தேதி பாரி வேட்டை, ஆக.31ம் தேதி காலை 6.30 மணிக்கு மேல் தேரோட்டமும், தொடர்ந்து தேர்கால் பார்த்தல் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

செப்.1ம் தேதி கொடியிறக்குதல், செப்.2ம் தேதி விடையாற்றி உற்சவத்துடன் விழா நிறைவு பெறுகிறது.

# பரமனந்தல் அருகே இருதரப்பினர் மோதல்: காவல்துறை வழக்குப்பதிவு

## போலீஸ் கண்காணிப்பு தீவிரம்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பரமனந்தல் கிராமம் அருகே இருதரப்பினரிடையே ஏற்பட்ட வாக்குவாதம் மற்றும் கைகலப்பு தொடர்பாக காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

பரமனந்தல் கிராமம் அருகே நேற்று முன்தினம் இரவு மணி மற்றும் அவரது நண்பர் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, அதே பகுதியைச் சேர்ந்த சேகர் என்பவரது வீட்டின் அருகே எதிர்பாராதவிதமாக கீழே விழுந்ததாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக இருதரப்பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக நேற்று (23.08.2026) காலை மீண்டும் இருதரப்பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டு, கைகலப்பாக மாறியுள்ளது. இதில்



சிலருக்கு லேசான காயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். இதையடுத்து, அவர்களிடம் காவல்துறையினர் வாக்குமூலம் பெற்று, செங்கம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்துள்ளனர். சம்பவம் தொடர்பாக சட்டப்படி விசாரணைநடத்தப்பட்டு, தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், அப்பகுதியில் மீண்டும் அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என திருவண்ணாமலை மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

# மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு தீர்வு காண சிறப்பு குறைதீர்வு கூட்டம்

## ஆக.28ல் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறுகிறது

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் குறைகளை கேட்டறிந்து, அவர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு காணும் வகையில் சிறப்பு குறைதீர்வு கூட்டம் வரும் ஆகஸ்ட் 28ஆம் தேதி நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை நேரடியாக கேட்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் சிறப்பு குறைதீர்வு கூட்டம் நடத்தப்பட உள்ளது. இந்த சிறப்பு குறைதீர்வு கூட்டம் வரும் 28.08.2026



வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள புதிய குறைதீர்வு கூட்ட அரங்கில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் தொடர்புடைய அனைத்து துறை அலுவலர்களும் கலந்துகொண்டு, மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள உள்ளனர்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளும் தவறாமல் இந்த சிறப்பு குறைதீர்வு கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகள் மற்றும்குறைகளைநேரடியாக தெரிவித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

### 498 விவசாயிகளின் வாக்குரிமை பறிப்பா?

# வாக்குகளை உடனடியாக மீண்டும் சேர்க்க வேண்டும்; இல்லையெனில் TAPCMS அலுவலகம் முற்றுகை; விவசாயிகளுக்காக களத்தில் இறங்கிய மோகன் கிருஷ்ணா

## மோகன் கிருஷ்ணா கடும் கொந்தளிப்பு

கே.ஜி.எஃப் தாலுகா வேளாண் விளைபொருள் விற்பனைக்கூட்டுறவுச்சங்கமானTAPCMSல்498விவசாயிகளின் வாக்குகள் ரத்து செய்யப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம், விவசாயிகள் மத்தியில் கடும் அதிருப்தியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

விவசாயிகளின் வாக்குரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, ஆர்.கே. அறக்கட்டளை தலைவர் வி. மோகன் கிருஷ்ணா தலைமையில் பெத்தமங்கலாவில் விவசாயத் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில்பேசியமோகன்கிருஷ்ணா,விவசாயிகளின் வாக்குரிமை என்பது யாராலும் பறிக்க முடியாத ஜனநாயக உரிமை எனக் கூறி, இந்த விவகாரத்தில் கடும் கண்டனத்தை பதிவு செய்தார்.

“498 விவசாயிகளின் வாக்குகள் எந்த அடிப்படையில் ரத்து செய்யப்பட்டன? அவர்களுக்கு முறையான விளக்கம் கொடுக்கப்பட்டதா?

தகுதியுள்ள விவசாயிகள் என்றால் அவர்களின் பெயர்கள் ஏன் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும்?” என அவர் கேள்வி எழுப்பினார்.

விவசாயிகளிடம் முறையான விழிப்புணர்வு ஏற்படுத்தாமல், திடீரென தபால் மூலம் அறிவிப்புகள் அனுப்பி வாக்குரிமையை பறிப்பது ஜனநாயக நடைமுறைக்கு எதிரானது எனவும் அவர் குற்றம்சாட்டினார்.

“விவசாயிகளின் வாக்குரிமையை பாதுகாக்க வேண்டிய அமைப்பிலேயே விவசாயிகளின் உரிமை கேள்விக்குறியாகிறது என்றால், இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது” என மோகன் கிருஷ்ணா ஆவேசமாக தெரிவித்தார்.

விவசாயிகளின் பிரச்சினைகளில் அரசியல் வேறுபாடுகளை கடந்து அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

குறிப்பாக, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ரூபகலா உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு, விவசாயிகளின் வாக்குரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட தக்காளி விவசாயிகளுக்கு ₹50,000 இழப்பீடு!



இதனுடன், கே.ஜி.எஃப் தாலுகாவில் வறட்சி மற்றும் தக்காளி சாகுபடியில் ஏற்பட்ட நஷ்டத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலையும் கூட்டத்தில் முக்கியமாக எடுத்துரைக்கப்பட்டது.

ஒரு ஹெக்டேருக்கு ₹50,000 இழப்பீடு உடனடியாக வழங்க வேண்டும் என மோகன் கிருஷ்ணா கோரிக்கை விடுத்தார்.

“விவசாயி உற்பத்தி செய்யும்போது மட்டும் அவரை நினைத்து, நஷ்டம் ஏற்படும் நேரத்தில் அவரை கைவிடக் கூடாது. விவசாயியின் கண்ணீருக்கு அரசு பதில் சொல்ல வேண்டும்” என அவர் வலியுறுத்தினார்.

“வாக்குகள் சேர்க்கப்படாவிட்டால் போராட்டம் தீவிரமாகும்!”

498 விவசாயிகளின் வாக்குகள் உடனடியாக மீண்டும் பட்டியலில் சேர்க்கப்படாவிட்டால், விவசாயிகளை ஒன்றிணைத்து அடுத்த கட்டப் போராட்டத்தை அறிவிப்போம் என மோகன் கிருஷ்ணா எச்சரித்தார்.

“முதலில் கோரிக்கை வைப்போம். அதிகாரிகளிடம் முறையிடுவோம். ஆனால் விவசாயிகளின் உரிமை தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டால், விவசாயிகளுடன் இணைந்து TAPCMS அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம். தேவையானால் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபடுவோம். விவசாயிகளின் உரிமை கிடைக்கும் வரை எங்கள் குரல் ஓயாது!” என அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

இந்த எச்சரிக்கை விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

“விவசாயிகளுக்காக பேசுவது மட்டும் அல்ல... களத்தில் நிற்பவர் மோகன் கிருஷ்ணா!”

விவசாயிகளின் வாக்குரிமை, விவசாயிகளின் வாழ்வாதாரம், வறட்சி நிவாரணம் என தொடர்ந்து மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து வரும் மோகன் கிருஷ்ணாவின் நடவடிக்கைக்கு கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் ஆதரவு தெரிவித்தனர்.

“விவசாயிகளின் பிரச்சினையை அரசியல் மேடையில் பேசுவது எளிது. ஆனால் விவசாயிகளுக்காக அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பி, தேவையானால் போராட்டக் களத்தில் நிற்பது தான் உண்மையான மக்கள் பணி” என விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முனிசாமி, மாவட்ட மற்றும் மாநில அளவிலான அரசியல் தலைவர்கள்உள்ளிட்டஅனைவரும்இந்தவிவகாரத்தில் தலையிட்டு விவசாயிகளின் உரிமையை பாதுகாக்க வேண்டும்எனமோகன்கிருஷ்ணாவேண்டுகோள்விடுத்தார்.

“விவசாயியின் வாக்கும் முக்கியம்... விவசாயியின் வாழ்க்கையும் முக்கியம்!”

ஒருபுறம் விவசாயிகளின் வாக்குரிமை கேள்விக்குறியாகியுள்ளதாக கூறப்படும் நிலையில், மறுபுறம் வறட்சியால் தக்காளி விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருவதாக கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, 498 விவசாயிகளின் வாக்குகளை மீண்டும் சேர்ப்பது, வாக்குரிமை குறித்து வெளிப்படையான விளக்கம் அளிப்பது, வறட்சியால் பாதிக்கப்பட்ட தக்காளி விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ₹50,000 இழப்பீடு வழங்குவது ஆகிய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

“விவசாயியின் வாக்கை மதிக்க வேண்டும்; விவசாயியின் உழைப்பை மதிக்க வேண்டும்;

விவசாயியின் கண்ணீருக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். விவசாயிகளின் உரிமைக்காக எத்தனை தடைகள் வந்தாலும் பின்னடையாமல் போராடுவோம்” என மோகன் கிருஷ்ணா தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் அபிலாஷ் ரெட்டி, கோவிந்தப்பா, சுதாகர் ரெட்டி, தொங்கலகொப்பா குப்பையா, சந்திரப்பா, கங்கி ரெட்டி, பாபு ரெட்டி உள்ளிட்ட விவசாயத் தலைவர்கள், பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் வாக்குரிமை பட்டியலில் பெயர்நீக்கப்பட்டதாகக்கூறப்படும்விவசாயிகள்கலந்து கொண்டனர்.

498 விவசாயிகளின் வாக்குகள் மீண்டும் சேர்க்கப்படுமா? வறட்சியால் பாதிக்கப்பட்ட தக்காளி விவசாயிகளுக்கு ₹50,000 இழப்பீடு கிடைக்குமா?

அடுத்த கட்ட போராட்டம் என்னவாக இருக்கும் என்பதை விவசாயிகள் மட்டுமல்ல... கே.ஜி.எஃப் தாலுகா முழுவதும் எதிர்பார்த்து வருகிறது.

விவசாயிகளின் உரிமைக்காக குரல் கொடுக்கும் மோகன் கிருஷ்ணாவின் இந்த போராட்டம் எந்த திசையை நோக்கிச் செல்கிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது.



பழநி அருகே நெய்க்காரப்பட்டியில் திருமண ஊர்வலத்தில் வெடிக்கப்பட்ட பட்டாசு தீப்பொறி பட்டு, அப்பகுதியில் உள்ள பள்ளிவாசல் வளாகத்தில் வெயிலுக்காக அமைக்கப்பட்டிருந்த கூரைப் பந்தல் தீப்பிடித்து எரிந்து சேதமடைந்தது.

### மக்களின் அவலக்குரலும் மௌனம் காக்கும் ஆட்சியரும்....

# சின்னமனூர் நகராட்சியின் குளறுபடியால் முடங்கிய போக்குவரத்து

தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட ராதாகிருஷ்ணன் ரைஸ் மில் தெருவில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு சாக்கடை கழிவுநீர் சாலையில் வழிந்தோடி பெரும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தியது. இதுகுறித்து பொது மக்கள் பலமுறை புகார் அளித்ததை தொடர்ந்து கழிவுநீர் கால்வாய் சீரமைப்பு பணிகள் தொடங்கப்பட்டன.



இருப்பினும், அப்பணியில் பல குறைபாடுகள் இருந்ததால், பொதுமக்கள் தற்காலிக நகராட்சி ஆணையாளர் உமாசங்கர் அவர்களிடம் முறையிட்டனர். அவர் அதிகாரிகளை நேரில் ஆய்வு செய்து முறையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட போதிலும், வந்த அதிகாரிகள் மேலோட்டமாக பார்வையிட்டு சென்றதுடன், சாக்கடையை மூட தரைமட்ட மூடி அமைப்பதற்கு பதிலாக, தரைக்கு மேல் பெரிய மேடான பாலத்தையே கட்டி வைத்துவிட்டு சென்றுள்ளனர்.

இந்தத் தவறான கட்டுமானத்தால் அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசலும் விபத்து அபாயமும் உருவாகியுள்ளது. வளைவு பகுதியில் இவ்வளவு உயரமான பாலம் அமைக்கப்பட்டுள்ளதால் பேருந்துகள் கவிழும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், பள்ளி வாகனங்கள் மற்றும் பிற வாகனங்கள் செல்ல முடியாத சூழல் நிலவுகிறது. இதனால் பொன்னகர்பகுதியில் உள்ள இரண்டு பள்ளிகளுக்கு செல்வோர், பேருந்து நிலையத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திற்கு பதிலாக 800 மீட்டர் தூரமும், சாமிகுளம் பகுதிக்கு செல்வோர் 1,000 மீட்டர் தூரமும், காய்கறி சந்தைக்கு வரும் ஆட்டோக்கள் 1 கிலோ மீட்டர் தூரமும் சுற்றி செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். மேலும், கட்டி முடிக்கப்பட்டு பல நாட்களாகியும் இந்த பாலம் பயன்பாட்டிற்கு வராமல் முடங்கி கிடப்பது மக்களிடையே பெரும் ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொது மக்களின் இந்த நியாயமான கோரிக்கைகள் மற்றும் அன்றாட அவதிகளை தொடர்ந்து நாளிதழ்களில் செய்தியாக பதிவிட்டு, மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு நேரடியாக கொண்டு செல்லப்பட்டது. பத்திரிகை தர்மத்தின்படி, மக்களின் அன்றாட சமூகப் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சேர்ப்பதே ஊடகங்களின் தலையாய கடமையாகும்.

அந்த வகையில், மக்கள் நலன் சார்ந்த ஒவ்வொரு செய்தி பதிவையும் நகல் எடுத்து, மாவட்ட ஆட்சியரின் நேரடி வாட்ஸ்அப் எண்ணிற்கும் ஆதாரத்துடன் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

ஆனால், இவ்வளவு தூரம் மக்கள் பிரச்சினையை நேரில் சுட்டிக்காட்டியும் மாவட்ட ஆட்சியர் தரப்பிலிருந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மௌனம் காப்பது ஏமாற்றமளிப்பதாக உள்ளது. "மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி" என்ற பழமொழிக்கு ஏற்ப, மாவட்ட நிர்வாகத்தின் தலைமை அதிகாரியே இதுபோன்ற மக்கள் நல பிரச்சினைகளில் அலட்சியம் காட்டும்போது, கீழ் மட்ட நகராட்சி அதிகாரிகளும் அதையே பின்பற்றி பணியை அரைகுறையாக செய்துவிட்டு மக்களை அலைக்கழிக்கின்றனர். கடந்த வாரம் கூட சின்னமனூர் அரசு மருத்துவமனை மற்றும் கால்நடை மருத்துவமனை ஆய்விற்காக வந்த மாவட்ட ஆட்சியர், அங்கிருந்து வெறும் 500 மீட்டர் தொலைவில் உள்ள இந்தபாலபிரச்சினையை நேரில் வந்து பார்வையிடாமல் சென்றது பொது மக்களிடையே பெரும் கேள்வியையும் விரக்தியையும் எழுப்பியுள்ளது.

அதிகாரிகளின் வேலைப்பளுவை கருதி பொறுமை காக்கும் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை புறக்கணிப்பது சரியான நிர்வாக அழகல்ல.

செய்தித் தாள்கள் வாயிலாகவும் வாட்ஸ்அப் பதிவுகள் மூலமாகவும் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் மக்கள் நல சிக்கல்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும். இனிமேலும் தாமதிக்காமல், மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்த விவகாரத்தில் தலையிட்டு, ராதாகிருஷ்ணன் ரைஸ் மில் தெருவில் தவறாக கட்டப்பட்டுள்ள பாலத்தை நேரில் ஆய்வு செய்து, போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறின்றி சீரமைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# நாட்டின் 4 திசைகளிலும் 108 அடி உயரத்தில் ஹனுமன் சிலை அமைக்கும் திட்டம்: ராமேசுவரத்தில் இறுதிக்கட்டத்தை நெருங்கியது

நாட்டின் 4 திசைகளிலும் ஹனுமன் சிலை அமைக்கும் திட்டத்தின் ஒருபகுதியாக, ராமேசுவரத்தில் 108 அடி உயர சிலை அமைக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தை நெருங்கி வருகின்றன.





நாட்டின் 4 திசைகளில் 108 அடி உயர ஹனுமன் சிலை அமைக்கும் திட்டம், 2008ம் ஆண்டு ஹெச்சி நந்தா அறக்கட்டளை அறங்காவலரும், அனுமன் பக்தருமான நிகில் நந்தா (49) என்பவரால் தொடங்கப்பட்டது.

இமாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள சிம்லா நகரின் புறநகர் பகுதியான ஜக்கு மலையில்தான் முதல்

சிலை அமைக்கும் பணி 2008ல் தொடங்கப்பட்டது. இப் பணி முடிந்து 2010ல் சிலை திறக்கப்பட்டது. குஜராத்தின் மோர்பி என்ற இடத்தில் உள்ள பரமபூஜ்ய பாபு கேஷ்வானந்த் ஆசிரமத்தில் 2வது சிலை அமைக்கும் பணி கடந்த 2018ல் தொடங்கியது.

இந்த 108 அடி உயர ஹனுமன் சிலையை 2022ல் காணொலி மூலம் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். அப் போது பிரதமர் மோடி பேசும்போது, “வலிமை, தைரியம், கட்டுப்பாடு ஆகியவற்றின் உருவமாக ஹனுமன் திகழ்கிறார்.

நாட்டின் நான்கு திசைகளிலும், ஹனுமன் சிலை அமைக்கும் திட்டத்தில் 3வது சிலை அமைக்கும் பணி ராமேசுவரத்தில் தொடங்கப்பட உள்ளது. 4வது சிலை மேற்கு வங்கத்தில் அமைக்கப்படும்” என்றார்.

ராமாயண முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதால், ராமேசுவரத்தில் ஹெச்சி நந்தா அறக்கட்டளை சிலை அமைத்து வருகிறது.

2022 பிப்ரவரியில் ராமேசுவரம் ஓலைக்குடா கடற்கரை அருகே ரூ.83 கோடி மதிப்பில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

தற்போது பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. ஹனுமன் இலங்கையைப் பார்ப்பதுபோல சிலை அமைக்கப்பட்டு வருகிறது.

வரும் பிப்ரவரிக்குள் சிலையை அமைக்கும் பணியை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. திறப்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொள்ள வாய்ப்பு உள்ளதாக அந்த அறக்கட்டளை நிர்வாகிகள் தெரிவித்தனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA